THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.5 )**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 11.11.2020. in accordance with the provisions of Act X of 3331

அசல் வழக்கு எண்: 468/2010

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.சௌந்தர்யா | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா.5.திருமதி.சௌந்தர்யா முதல் விசாரணை :

நான் திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையை தொடர்ந்து சாட்சியம் அளிக்கிறேன். மேலக்கோட்டை கிராம சர்வே எண்.14/14-க்கான 10(1) நகல் சா.சா.ஆ.2. மேலக்கோட்டை கிராம சர்வே எண்.14/14-க்கான சாகுபடி அடங்கல் கணக்கு சா.சா.ஆ.3. மேலக்கோட்டை கிராம சர்வே எண்.14/14-க்கான அடங்கல் பதிவேடு சா.சா.ஆ.4. மேலக்கோட்டை கிராம சர்வே எண்.14/14-க்கான புல வரைபடம் சா.சா.ஆ.5. 5.5.2010ம் தேதியிட்ட உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு சா.சா.ஆ.6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் W.P.No.(MD).12522 மற்றும் 12523/2010ல் ஏற்பட்ட உத்தரவின் நகல் சா.சா.ஆ.7. சர்வே எண். 14/14க்கான உட்பிரிவுகளை காட்ட கூடிய சிட்டா சா.சா.ஆ.8. சா.சா.ஆ.7 உத்தரவின் அடிப்படையில் சா.சா.ஆ.6 உத்தரவு ரத்து செய்யப்பட்டதா என்றால் 2015ம் வருடம் ரத்து செய்யப்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.153/2012 மற்றும் மு.வ.எண்.468/2010 வழக்குகள் நிலுவை-யில் இருந்து வருவதால் வழக்குகள் முடிந்த பின் நடவடிக்கை எடுத்து கொள்ளும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சா.சா.ஆ.6 உத்தரவை ரத்து

செய்ய தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் திருமதி.பரிமளா, திருமதி.பொன்னம்மாள், திருமதி.ராமுத்தாய் ஆகியோர்க-ளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேலக்கோட்டை கிராம புல எண். 14/14ல் கண்ட அனைத்து பட்டாதாரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் W.P.No.(MD).12522 மற்றும் 12523/2010ல் கண்ட மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. சா.சா.ஆ.7ல் சர்வே எண்.14/14ல் கண்ட அனைத்தும் பட்டாதாரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டடதா என்றால் இல்லை. சா.சா.ஆ.7 உத்தரவில் மனுதாரர்களுக்கு மட்டும் அறிவிப்பு அனுப்ப உத்தவிட்டுள்ளதால் அவர்களுக்கு மட்டும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. கண்ணாடிசாமி, இளஞ்சியம், நடராஜன், சுப்பிரமணி, உசேன் பாட்ஷா, முத்துகண்ணு மற்றும் பலர் சா.சா.ஆ.7 ஆவணத்தில் தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கும். ராமுத்தாய் பெயரில் சர்வே எண். 14/14ல் கண்ட 88 செண்ட் நிலத்திற்கும் ராமுத்தாய் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் கிராம நிர்வாக அலுவலக ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்படும் என்றால் சரிதான். உயில் மற்றும் சொத்தின் உரிமை மூலம் பற்றியோ விசாரிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் உள்ளதா என்றால் இல்லை. திருமங்கலம் வட்டாட்சியர் உத்தரவு ஏதேனும் பிறப்பித்தால்தான் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். திருமங்கலம் வட்டாட்சியரின் ந.க.எண்.18006/2009/சி3 நாள் 23.12.2009ம் தேதியிட்ட உத்தரவின் நகல் பதிவறையில் ஒப்படைக்கப்-படவில்லை என குறிப்பு உள்ளது. திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பிறப்பிக்கப்படாத உத்தரவிற்கு உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் மேல் முறையீடு உத்தரவு பிறப்பிக்கப்ட்டுள்ளது என்றல் சரியல்ல. சர்வே எண்.14/14ல் கண்ட சொத்தின் யார் பட்டாதாரர்களாகவும், அனுபவதாரர்களாகவும் இருந்தார்கள் என்று புலதணிக்கை செய்தோமா என்றால் செய்தோம். சுப்பிரமணியன் மனைவி ராமுத்தாய், முத்து,

உலகம்மாள் ஆகியோர்கள் வீடு அமைத்துள்ளனர் மற்ற இடங்கள் காலி இடமாக உள்ளது. சர்வே எண்.14/14ல் கண்ட உட்பிரிவுகளை கிராம சிட்டாவின் அடிப்படையில் நான் பார்த்தேன். யூ.டி.ஆர் கிராம சிட்டாவின் கணக்குபடி பார்த்தோம். யூ.டி.ஆர் கிராம சிட்டாவில் கண்ணாடிசாமி, இளஞ்சியம், நடராஜன், சுப்பிரமணி, உசேன் பாட்ஷா, முத்துகண்ணு ஆகியோர்கள் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது. சா.சா.ஆ,8 ஆவணத்தின் அடிப்படையில் பார்த்ததில் 3 வீடுகளை தவிர மற்ற இடங்கள் காலியாகத்தான் இருந்தது. ஒ.மு. கோப்புகளை 1 ஆண்டிலும், மூ.மு. கோப்புகளை 3 ஆண்டிலும், ப.மு கோப்புகளை 10 ஆண்டிலும் அழிக்கப்படும். மேற்படி கோப்புகளை அழிப்பதற்கு மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெறப்படுமா என்றால் இல்லை. வருவாய் கோட்டாட்சியர் அனுமதி பெற தேவையில்லை. District Office Manual (அலுவலக நடைமுறை) படி கோப்புகளை அழிப்பதற்கு வருவாய் கோட்டாட்சியருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருவாய் கோட்டாட்சியர் கோப்புகளை அழிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேண்டிய நபர்களுக்கு பட்டா ஏற்படுத்தி பின்னர் கோப்புகள் அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மு.வ.எண்.153/2012 மற்றும் மு.வ.எண்.468/2010 வழக்குகளில் வருவாய் கோட்டாட்சியர் தரப்பினர் இல்ல்ல என்றால் சரிதான். மேற்படி வருவாய் கோட்டாட்சியரின மேல்முறையீட்டில் தாக்கல் செய்துள்ள மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் வழக்கறிஞர்கள் வழக்கின் பிராது நகலை கொடுத்துள்ளனர். மாவட்ட ஆட்சியருக்கு வருவாய் கோட்டாட்சியர்கள் கட்டுப்பட்டவர்கள் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் இவ்வழக்கில் தரப்பினர் இல்லாததால் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டிய கேள்வி எழவில்லை. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரும் மனுதாரர் வழக்கறிஞரும் சேர்ந்து மனுதாரர்களின் பெயரில் பொய்யாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மு.வ.எண்.153/2012 வழக்கில் கண்ணாடி சாமி, இளஞ்-சியமோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் மனுதாரர்களுக்கு அனுப்பி

வைக்கப்படும். சா.சா.ஆ.6 உத்தரவு மட்டும் மனுதாரரின் விருப்பப்படி வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது. 20.08.2020ம் தேதி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியா அலுவலகத்தில் இருந்து மு.மு. எண்.1902/2020/-அ3 படி அனுப்பபட்ட குறிப்பாணை சா.சா.ஆ,9. மு.வ.எண.153/2012 வழக்கில் கண்ட கோவிந்த அய்யங்கார் அவர்களை விசாரிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. வருவாய் ஆவணங்களின் படி நான் சாட்சியம் அளிக்கிறேன். மு.வ.எண்153/2012 வழக்கில் கண்ட சொத்து சர்வே எண்.14/14-க்குரியது என்றால் சரிதான். சா.சா.ஆ.7 உத்தரவினை பதிவு செய்ததற்கான பதிவேடு உள்ளதா என்றால் உள்ளது அதனை பெற்று என்னால் தாக்கல் செய்ய இயலும். வழக்கு நிலுவையில் இருக்கும் போது கோப்புகளை அழிமானம் செய்ய கூடாது என்றும் அவ்வாறு அழிமானம் செய்திருந்தால் அது சட்டபடி தவறு என்று சொன்னால் சரியல்ல. 23.09.2014ம் தேதியிட்ட உத்தரவின் படி கோப்புகள் அழிக்கப்பட்டது. 23.09.2014ம் தேதியிட்ட உத்தரவில் வழக்கு முடிவடைந்ததாக காண்பித்து அழிக்கப்பட்டதற்கான பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் மற்றும் நில நிர்வாக ஆணையரால் ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால்தான் அவ்வாறான ஆவணம் அழிக்கப்படும். கோப்புகளை அழிமானம் செய்வதற்கு வருவாய் கோட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்ய இயலும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ரிட் மனுவின் அடிப்படையில் பரிமளா, பொன்னமாள் சொத்துக்களை பொறுத்து மட்டும் பட்டா மாறுதல் நடவடிக்கை செய்திருக்க வேண்டும் என்றும் மொத்த விஸ்தீரணத்தை பொறுத்தும் பட்டா மாறுதல் நடவடிக்கை செய்ய இயலாது என்றால் சரியல்ல பட்டா மாறுதல் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்-படவில்லை விசாரணை மட்டுமே செய்யப்பட்டது. நில நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கையின் படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது பட்டா மாறுதல் நடவடிக்கை செய்ய கூடாது என விதி உள்ளது அது சா.சா.ஆ.10. சர்ேவ எண்.14/14ல் கண்ட 88 செண்டும் பட்டா மாறுதல்

2010ல் செய்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.14/14ல் கண்ட சொத்தில் பரிமளாவிற்கும், பொன்னமாளிற்கும் தலா 5 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.14/14ல் பரிமளா, பொன்னம்மாள் என்ற நபர்கள் யாரும் இல்லை. பரிமளா, பொன்னம்மாள் பெயரில் வீட்டு வரி ரசீது செலுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து பற்றி நான் புலதணிக்கை செய்யவில்லை என்றும் புலதணிக்கை செய்யாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ,6 உத்தரவில் இந்த வழக்கின் வாதிகளோ, மற்ற தரப்பினரோ தரப்பினர்கள் இல்லை என்றால் அலுவலக கோப்பு இல்லாமல் என்னால் முழு விபரம் சொல்ல முடியாது. சா.சா.ஆ.5 ஆவணத்தில் உட்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு இல்லாமல் உட்பிரிவுகளை ஒன்றிணைக்க முடியாது. சா.சா.ஆ,5 ஆவணத்திற்குரிய யூ.டி.ஆர் "அ"பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். சா.சா.ஆ.6 உத்தரவின் அடிப்படையில் தனியாக ஆர்.டி.ஆர் நம்பர் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு உத்தரவு பிறப்பிக்கப்படும். சா.சா.ஆ,7 உத்தரவின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மூ.மு.எண். 3245/2015/அ2-ன் அடிப்படையில் தரப்பினர்-களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நிலுவையில் இருப்பதாக தெரிவித்ததால் கோப்பு முடிக்கப்பட்டது. சா.சா.ஆ,7 உத்தரவிற்கு பிறகு ராமுத்தாய் பெயரில் எந்தவித பட்டா மாறுதல் உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவினை வருவாய் கோட்டாட்சியர் மதித்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. மூ.மு. 3245/2015/அ-2 விசாரணையில் பொன்னம்மாள், பரிமளா ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ராமுத்தாய் மு.வ.எண்.153/12 வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், மேற்படி வழக்கின் பிராது நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யப்-படவில்லை. ராமுத்தாய் பெயரிலான பட்டா தற்போது வரை உள்ளது என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் பட்டா ரத்து செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருப்பதால் ராமுத்தாய் பெயரிலான பட்டா மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பி.எஸ்.ஒ, ஆர்.எஸ்.ஓ. விதிகளின் அடிப்படையில் பட்டா மாறுதல் சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும், பி.எஸ்.ஒ, ஆர்.எஸ்.ஓ. விதிகளின்படி பட்டா மாறுதல் நடவடிக்கை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

(பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு உரிய சந்தர்ப்பம் அளித்தும், பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)